யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | இந்து சமயம் |
|---|---|---|

## இந்து சமயம் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | **5** | 11) | **4** | 21) | **1** | 31) | **5** | 41) | **4** |
| 02) | **4** | 12) | **2** | 22) | **2** | 32) | **1** | 42) | **2** |
| 03) | **1** | 13) | **3** | 23) | **5** | 33) | **3** | 43) | **3** |
| 04) | **2** | 14) | **1** | 24) | **4** | 34) | **5** | 44) | **4** |
| 05) | **4** | 15) | **2** | 25) | **3** | 35) | **3** | 45) | **3** |
| 06) | **2** | 16) | **3** | 26) | **2** | 36) | **2** | 46) | **5** |
| 07) | **5** | 17) | **1** | 27) | **4** | 37) | **3** | 47) | **4** |
| 08) | **4** | 18) | **5** | 28) | **5** | 38) | **3** | 48) | **4** |
| 09) | **5** | 19) | **2** | 29) | **4** | 39) | **2** | 49) | **4** |
| 10) | **4** | 20) | **3** | 30) | **4** | 40) | **4** | **50)** | **5** |

($50 \times 2 = 100$ புள்ளிகள்)

## இந்து சமயம் – II

### பகுதி ‘அ’

01) அ) சமயநெறிகள்

- ✶ புராணங்கள் இந்துசமயத்தின் கருவூலங்கள்
- ✶ இந்துசமயத்தில் காணப்படும் பல வழிபாட்டு அம்சங்கள் கூறப்பட்டுள்ளன.
- ✶ அறுவகைச் சமயத்தின் கருவூலம்
- ✶ சமய நம்பிக்கை, வழிபாட்டு முறைகள், தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன.
- ✶ ஆலயவழிபாடு, திருவுருவ வழிபாடு, தலயாத்திரை, விரதம் தவம், தோத்திர முறைகள் முதலிய அம்சங்கள் விருத்தியடைந்துள்ளன. (5 புள்ளிகள்)

ஆ) இலக்கிய மரபு

புராணங்கள் தனி இலக்கியங்களாக இதிகாசங்களுடன் சேர்ந்து வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தல புராணங்கள் காவியங்கள் தோன்ற காரணமயின. சிற்பசாஸ்திர நூல்கள், தோத்திர நூல்கள் என்பவற்றின் செல்வாக்கு நாயன்மார்கள், ஆழ்வார்களின் பாடல்களுக்கும், சிற்றிலக்கியங்களுக்கும் புராணங்கள் காரணமாகின்றது.

(5 புள்ளிகள்)

இ) வம்ச வரலாறுகள்

- ✶ புராணங்கள் சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம் என்ற பஞ்ச லட்சணங்களை கூறுகின்றது.
- ✶ இதைவிட ரக்ஷா, ஹேது, அபாச்ய, முத்தி, விருத்தி என மேலும் ஐந்து இலட்சிணங்களை உடையது.

இதில் வம்சானு சரிதம் முக்கியமானது. இதில் நந்தர், சுமேரியர், சங்கரர், சாதவாகனர் ஆகிய அரச குலங்கள் முக்கியமானவை.

உ+ம் :- விஸ்ணு புராணத்தில் நந்தர் குலத்தில் கண்ணர் குலத்தில் பிறந்து வளர்ந்தமை பற்றிய கதைகள் காணப்பட்ட மகதம் கோசலம் முதலிய இராச்சியங்களும் சூரிய, சந்திர வம்சங்களும் குறிப்பிடத்தக்கன. (5 புள்ளிகள்)

ஈ) கோயிற் சிற்பங்கள்

ஆலய சிற்ப வேலைப்பாடுகளில் புராணக் கதைகள் காணப்படுகின்றன. திரிபுரார்ந்திகள், காமந்தகர் லிங்கோற்பவர் முதலிய சிவ வடிவங்கள் சித்திரிக்க புராணங்கள் துணை புரிகின்றன. வைணவ சிற்பம் வைணவ புராணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இதுபோல சக்தியின் மகிடாசுரமர்தனி வடிவம் என்பவற்றைக் கூறலாம்.

(5 புள்ளிகள்)

02) அ) தொன்றுதொட்டு வரும் அறிவு என்பது பொருள்

ஆன்மா மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்

ஆ - பசு
க - பதி
ம - பாசம்

} பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்

ஆ - சிவஞானம்
க - மோட்சம்
ம - மலநாசம் அதாவது மலநாசம் பண்ணி சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது எனவும் பொருள்படும்

புராண இதிகாசத்திற்கு பிற்பட்ட காலம் திருமந்திரத்திற்கு முற்பட்ட காலம்

(2 புள்ளிகள்)

ஆ) ஆலய அமைப்பு

அக்கினி வழிபாடு, உருவவழிபாடு, ஆலய அமைப்பு இடத்தெரிவு, தூய்மைப்படுத்தல் கர்ஷனர். கட்டிட அமைப்பு, அமைய வேண்டிய இடம், அளவைப் பிரமாணங்கள் போன்றவை விரிவாக விளக்குகின்றன.

பிரகார லட்சண விதிப்படலத்தில் பிரகாரம் அமைக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன.
சிலாபரீட்சணம் என்ற தலைப்பில் திருவுருவங்களை செதுக்குவதற்கு கருங்கல்லை தெரிவு செய்யும் முறை பற்றி கூறுகின்றன.

கிரியை முறை :-

- ஆன்ம ஈடேற்றம் கருதிய ஆகமங்கள் கிரியை முறைகளை கூறுகின்றன.
- கோயிலையும், திருவுருவ அமைப்பையும் மையமாகக் கொண்டது.
- ஆலய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூஜை அங்கங்கள், மந்திரம், கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் பற்றிய விளக்கம்.

(10 புள்ளிகள்)

இ) தத்துவக் கோட்பாடு

- சிவகாமங்கள் யோகாபாதம், ஞானாபாதம் என்பவற்றில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் உண்டு.
- கிரணம், சௌரவம், பௌஷ்கரம் ஆகிய ஆகமங்களில் சித்தாந்த சிந்தனைகள்
- பதி, பசு, பாசம் முப்பொருளுண்மை. அவற்றின் இயல்பு மூவகைத் திருமேனிகள். அவற்றின் இயல்புகள் ஐந்தொழில்கள். ஆன்ம ஈடேற்றம் மும்மலம் என்பவற்றைக் கூறுகின்றது.
- நாற்பதை நெறியினூடாக குருலிங்க சங்கம வழிபாடு சிவ சின்னங்கள் பற்றிய விளக்கம்
- சத்தினி பாதக் கோட்பாடு முத்திக் கோட்பாடு

(8 புள்ளிகள்)

03) அ) காலம் :- கி. பி. 5ம் நூற்றாண்டில் அல்லது கி. பி. 2ம் நூற்றாண்டில் கபிலரால்

நூல்கள் :- சாங்கிய சூத்திரம்
சாங்கிய சாரிகை

(4 புள்ளிகள்)

ஆ) காணல்
கருதல்
உரை

(3 புள்ளிகள்)

இ) சாங்கியம் என்பது பூரண அறிவு

புருடன்

பிரகிருதி சற்காரியவாதக் கோட்பாடு

முக்குணம்

சற்காரியவாதக் கோட்பாடு - அதன் விளக்கம்

கடவுள் உண்டு என சாங்கியம் ஏற்கவில்லை.

(8 புள்ளிகள்)

ஈ) பிரமாணம், புருடன், பிரகிருதிமாயை, முக்குணம் முதலான கோட்பாடுகள் சைவ சித்தாந்தத்திற்கு முன்னோடியாகவும், பிரமாணம், மாயை வேதாந்தத்திற்கும் முன்னோடியாகவும் அமைந்தமை

(5 புள்ளிகள்)

## பகுதி 'ஆ'

04) அ) ஆ + துவைதம் - இரண்டல்ல பிரமம் மட்டும் உண்மை

பிரமாணங்கள் :- பிரதியட்சகம், அனுமானம், ஆப்தவாக்கியம்,
உவமானம், அனுலாபக்தி, அருந்தா பக்தி

(4 புள்ளிகள்)

ஆ) பிரமம் மட்டும் உண்மை

அநாதியானது, அந்தமற்றது, அழிவற்றது, எங்கும் நிறைந்தது.

2 நிலை (1) நிற்குணநிலை - மாயையுடன் சேராதநிலை
(2) சகுணநிலை - மாயையுடன் சேர்ந்த நிலை

மகாவாக்கியம் :- தத்துவமஸி
அகம் பிரமாஸ்மி
சோகம் அஸ்மி

அவித்தையாகிய அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெறுமிடத்து பிரம்மம் எங்கும் பரந்து இருக்கும் பரிபூரண பொருள்

(8 புள்ளிகள்)

இ) சங்கரர் ஆன்மாவுக்கு 2 நிலைகள் கூறுவர்

பரமாத்மா - (என்றும் உள்ள பொருள்)

ஜீவாத்மா - (அவித்தைக்கு உட்பட்டது)

ஜீவாத்மாவும், பரமாத்மாவும் - (ஒன்றேன நிறுவும் வாதங்கள்)
(அவச்சேவவாதம், பிரதிவிம்பவாதம்)

ஆன்ம விடுதலை :-

✶ சங்கரர் ஞானத்துக்கு முதன்மை அளிப்பவர்

✶ ஆன்மா அவித்தையில் இருந்து விடுபட்டு தன்னை பிரமம் என உணர்தல் - விடுதலை

✶ சங்கரர் கூறும் முத்தி - அத்துவிதமுத்தி - அத்வைத அனுபவம்

2 முத்தி → ஜீவன் முத்தி விதேகமுத்தி.

(8 புள்ளிகள்)

05) காலமும் சூழ்நிலையும்

கி. பி. 6 அம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 9 ஆம் நுஸற்றாண்டு வரையுள்ள காலம் பல்லவ காலமாகும்.

✶ சைவ வையவ சமயம் வளர்ச்சி பெற்ற காலம்

✶ பக்தி இயக்கத்தின் ஊடாக இறை இருப்பை நிலைநிறுத்திய காலம்

✶ முதன் முதல் அழியாத பொருட்களைக் கொண்டு ஆலயம் அமைக்கப்பட்ட காலம்.

✶ மகேந்திரவர்மன் - குடை தளி → (மண்டகப்பட்டு மாமண்டூர்)
மாமல்லன் - மலைதளி → (மாமல்லபுர பஞ்சபாண்டவர் ரதம்)
இராஜசிம்மன் - காட்டுத்தளி → (முகுந்தன் + வைகுந்தப் பெருமாள்)
நந்திவர்மன் - முறையிலான ஆலய அமைப்பு

✶ காஞ்சியிலுள்ள → முத்தீஸ்வரம் மதங்கேஸ்வரம், வாடாமல்லிஸ்வரர் வீரட்டானேஸ்வரர் முக்கியமான தலங்களாகும்.

✶ திராவிட கட்டிடக்கலைக்கு முன்னோடியாக அமைந்தது.
இறையகம், அந்தராளம், முகமண்டபம், பரிபாலர் தேவாலயம், சுற்றாலை முதலான அமைப்புக்கள் பெரிதும் வளர்ச்சியடைய இக்காலம் முன்னோடியாக இருந்தது.

✶ கற்சிற்பங்கள், சுதைச் சிற்பங்கள், படிமங்களும் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த திராவிடக் கட்டிடக் கலையே முன்னோடியாக அமைந்தது.

(20 புள்ளிகள்)

06) அ) ✶ பாசத்தால் கட்டுண்டதால் ஆன்மா பசு எனப்படுகின்றது.
✶ பல, வியாபகம், நித்தியம்
✶ சார்ந்ததன் வண்ணம், சதசத்து விளக்கம்
✶ அறிவித்தால் மட்டும் அறிவது
✶ கேவல சகல இயல்புகளும்

(5 புள்ளிகள்)

ஆ) மும்மலத் தொடர்பு
அநாதியாக பற்திப்பது ஆணவம் - விளக்கம்
மலங்களின் சேர்க்கையால் முப்பிரிவுகள்
கன்மம் பிறவிக்கு அடிப்படை
மாயை தனு கரண புவன போகங்களை கொடுப்பது
மலம் நீங்க இறைவன் திருப்பாதம் சேர்தல்
இறைவனை அடைதல் (10 புள்ளிகள்)

இ) வழிகள் - சைவநாற்பதம், குருலிங்க சங்கம வழிபாடு. சிவசின்னங்கள், விரதம், திருமுறை ஓதல், ஆலய வழிபாடு
இருவினை ஒப்பு, மலபரிபாசம், சத்தினி பாதம், தாடலை (தாள் + தலை)

(5 புள்ளிகள்)

07) அ) “விரதமானது மனம் பொறிவழிப்போகாது நிற்றற் பொருட் உணவை விருத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடல்” ஆகும்.

(2 புள்ளிகள்)

ஆ) விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, ஆவணி சதுர்த்தி, சித்திர விநாயகர் சதுர்த்தி

(4 புள்ளிகள்)

இ) விநாயகசஷ்டி
காலம் :- காரத்திகை மாதத் தேய்பிறை பிரதமை தொடக்கம் மார்கழி மாத வளர் பிறைச் சஷ்டி வரை உள்ள 21 தினங்களாகும்.
நியதிகள் :-
✶ தொடக்க நாளில் 21 இழை கொண்ட காப்பை ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிதல்.
✶ 20 தினங்களும் ஒரு பொழுது நண்பகல் உணவு உண்ணல் இரவில் பால் பழம் உண்ணல்
✶ தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல் நிவேதனம் செய்தல்
✶ இறுதித் தினம் உபவாசம் செய்தல்

- ✶ மறுநாள் காலை பாரணை செய்தல்
  அயலவருடன், உறவினருடன், இணைந்து உண்ணல். 21 வருடம் அனுட்டித்தல் வேண்டும். முடியாதவர்கள் 7 வரடம் நோற்பது சிறப்பு ஆகும்.
- ✶ அகப்புறத் தூய்மை பேணப்படல்

(10 புள்ளிகள்)

ஈ) எனது மனதில் அமைதி பக்தி ஏற்பட்டது.
இறைவனுடன் ஒன்றுபடல்
தனது அனுபவம் குறிப்பிடப்படல் வேண்டும்.

(4 புள்ளிகள்)

08) சிறுகுறிப்பு

அ) இராமகிருஷ்ணமிசன்

- ✶ ஸ்ரீராமதிருஷ்ணரது போதனைகளை இந்து சமுதாயத்தில் பரப்ப அவரது சீடராகிய சுவாமி விவேகானந்தரால் இந்தியாவில் கல்கத்தா நகரில் 1897, மே, 1ம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.
- ✶ ஆதரவற்ற மாணவருக்கு உணவு, உடை, கல்வி அளித்தல்.
- ✶ சமயப்பணி, சமூகப் பணி உலகளாவிய நிலையில் மேற்கொள்ளும் நிறுவனம்.
- ✶ துறவிப் பயிற்சிக்கு முக்கியம் அளித்தல்
- ✶ வேத உபநிடத கருத்து சார்ந்த உபதேசங்கள்
- ✶ ஒழுக்க நியமங்கள் பேணல்
- ✶ நூல்களை வெளியிடல், பாடசாலை நிர்வாகம் சமயப் போட்டி நடத்தல்

(5 புள்ளிகள்)

ஆ) இந்து மருத்துவம்

- ✶ வேதங்கள் - அஸ்வினி தேவர்கள் (குறைபாட்டை நீக்குபவர்)
- ✶ சரகசம்கிதை - சஞ்சிவி மலை பற்றிய குறிப்பு
  வழிபாட்டு முறைகளில் மருத்துவம்
- ✶ தோப்புக்கரணம் போடல், நெற்றியில் குட்டுதல், விரதம் இருத்தல், மலை ஏறுதல், தலயாத்திரை யோகாசனம் - தியானம் என்பன.

(5 புள்ளிகள்)

இ) தஞ்சைப் பெருங்கோயில்

- ✶ சோழர்கால ஆலயம் - இராஜராஜசோழன் அமைத்தது.
- ✶ விமான அமைப்பு - அளவுப்பிரமாணம்
- ✶ கட்டிட நுண்கலை சிறப்புக்கள் மண்டபங்கள்
- ✶ தூண் அமைப்புக்கள் - நுண்கலையின் இருப்பிடம்
- ✶ தென்திசை மேரு என அழைக்கப்படும்.

(5 புள்ளிகள்)

ஈ) விஷ்ணுவின் மூர்த்தி பேதங்கள்

- ✶ பரம் - மேலான வடிவம்
- ✶ வியூகம் - வெளிப்பட்ட வடிவம் (திருபாற்கடல்)
- ✶ விபவம் - தோன்றிவந்த வடிவம் (தியோரை அழிக்க)
- ✶ அந்தர்யாமி - உள்ளுறை வடிவம்
- ✶ அர்ச்சா - வழிபாட்டிற்குரிய வடிவம்
- ✶ நின்றி, இருந்த, கிடந்த வடிவங்கள்

(5 புள்ளிகள்)

உ) நல்வழி

- ✶ நல் + வழி → மனிதன் நல்வாழ்வு வாழ வழிகாட்டும் நூல்
- ✶ சோழர்காலத்தில் ஔவையாரால் இயற்றப்பட்டது.
- ✶ கடவுள் வாழ்த்துடன் 40 வெண்பாக்களைக் கொண்டது.
- ✶ கடவுள் வாழ்த்தில் சங்கத்தமிழ் மூன்றும் தா என விநயமாக வேண்டுகிறார்.
- ✶ சமய தத்துவங்களை அறிவுரையாகக் கூறுதல்
- ✶ வினைப்பயன், யாக்கை, நிலையாமை, செல்வம், நிலையாமை, ஒழுக்கம் பேணல், நடுவுநிலைமை கருத்தக்கள்
- ✶ திருவைந்தெழுத்தின் பெருமை, திருநீற்றின் பெருமை, வேதநூற்சிறப்பு முதலிய சைவ சமயக் கருத்துக்களை கூறுகின்றது.

(5 புள்ளிகள்)

ஊ) திருக்கேதீஸ்வரம்

- ✶ இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை எனும் ஊரில் உள்ள சிவாலயம் (வரலாற்று கதைகள்)
- ✶ பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று
- ✶ கேதுவால் வழிபடப்பட்டது
- ✶ பாடல் பெற்ற திருத்தலம் - சம்பந்தர், சுந்தரர்
- ✶ திருக்கேதீஸ்வர நாதர் - இறைவன்
- ✶ கௌரி அம்மாள் - இறைவி
- ✶ பாலாவி - தீர்த்தம்
- ✶ வன்னி மரம் - தலவிருட்சம்
- ✶ 40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- ✶ பஞ்சலிங்கங்கள் 63 நாயன்மார் திருவுருவங்கள்
- ✶ சிவராத்திரி விழா சிறப்பானது.

(5 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education